உ

கடவுள் துணை.

பெண்கள் ஜாதக மென்னும்

# ருது நூல் சாஸ்திரம்.

## பரிகாரத்துடன்.




பூவிருந்தவல்லி,

சு. துளசிங்கமுதலியார் குமாரர்

பூ. து. மாசிலாமணி முதலியாரவர்களால்

தமது

சுந்தரவிலாச யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1921.

இதன் விலை அணா-1.

நெ. 3-25, வல்லம் பங்காருசெட்டி வீதி, வேபேரி மதராஸ்,

உ

பெண்கள் ஜாதகமென்னும்,

# ருதுநூல்சாஸ்திரம் பரிகாரத்துடன்.

## காப்பு விருத்தம்.

இத்தரையில் மாதிடமென் றுருவுகொண்ட இருபாலிற் பெண்களிட ருதுநூலப்பா, முத்திபெற முன்னோர்கள் சொன்னவாக்கு மொழியொன்றுந் தப்பாது முனைனேன்சாக்ஷி, எத்திசையும் பரிகாரத் தோடுசொன்னேன் என்தாயார் சரஸ்வதியினிருதாள் காப்பே.

(ருதுவாகு மாதப்பலன் விருத்தம்)

சித்திரையில்புருஷனுக்கு ஆகாதப்பா சுகமடைவாள் வைகாசிமாதமானல், புத்ரசம்பத்தாயிருப்பர்ள் ஆனிமாதம் *புருஷரைலாமிச்சிப்பானாடிமாதம், சித்திரம்போல்பிள்ளைகளை மிகவே *பெற்ற சிறப்படைவாள் ஆவணியில்ருதுவேயானல், பத்தியுடன்விர்த்தியுண்டு புரட்டாசிக்கு பதிவிரதையாயிருப்பாள் பரிட்சைப்பாரே.

(சித்திரைமாத தோஷத்திற்குச் சாந்தி.)

சித்திரையில்ருதுவான தோஷத்திற்கு செய்யவேபரிகார முறையைக்கேளும், பத்தினிக்கும்புருடனுக்கும் புதியஆடை பாங்காகயுடுத்தியேகுந்தவைத்து, முத்திலுமோ துவாரங்கள்செய்தாக மங்கலயமிருவரிடசிரசில்வைத்து, சுத்தசலம்வார்த்த பின்னர்சூரையிட்டு சுமங்கலிக்கு ஆடைதனை தானஞ்செய்யே.

(ஆடிமாதம் தோஷத்திற்கு சாந்தி.)

ஆடியிலேவடிவுகொண்ட பெண்தானப்பா அனைவரையுமிச்சிப்பாளென்றதற்கு, தேடியேபலவிதமாங்கனிகளெல்லாந் தாம்பாளந்தனில்வைத்து பூவும்வைத்து, கோடியென்றசேலைகட்டி குந்தவைத்து குமரிக்குகட்டியதை திருஷ்டிசுத்தி, ஆடுகின்றபிள்ளைகளாம்பலருக்கீந்தால் ஆடிமாததோஷமது அகன்றுபோச்சே.

பாரப்பா அற்பிசியில்ருதுவேயானல் பிள்ளைகளை யீன்றெடுத்துவித்தவையாவாள், பாரப்பாகார்த்திகையில் ருதுவேயானல் பலரையுமேதூஷிப்பாள் கோபியாவாள், பாரப்பா மார்கழியில் ருதுவேயானல் மக்களுண்டுபொருளுமுண்டு மனதுநோகாள், பாரப்பாதைமாதம்ருதுவேயானல் புண்யவதியாயிருப்பாள்பெருமைகொள்ளே.

(அற்பிசிமாத தோஷத்திற்கு பரிகாரம்.)

அற்பிசியில்ருதுவான தோஷத்திற்கு அப்பனே சாந்தியது வரைக்கேளு, கற்புடையமங்கிலியை கண்டழைத்து கருத்தாக அப்பியங்கம்செய்துவைத்து, பொற்றாலிசெகப்பாடை மஞ்சள் குங்கும்பூவுடனேதாம்பூலமிதுகளெல்லாம், கற்கொடைபோல் தானமதுசெய்வாயாகில் காடர்து அற்பிசியின்தோஷந்தானே.

(கார்த்திகைமாத தோஷத்திற்கு பரிகாரம்.)

கார்த்திகைமாததோஷங் கட்கவேசாந்திகேளு பார்த்துநீ
சிவாலயத்தில்பசுவிடனெய்கானப்பா, வார்த்துநீதீபமுவைத்தா
ல்வஞ்சிக்கோர்தோஷமில்லை, கீர்த்தியாம்கவனமாக சித்தர்கள்
சொன்னவாக்கே.

பெருமையுண்டுதிரவியமுங்குறைவிராது பாக்யவதியாயிருப்
பாள்மாசிமாதம், அருமையடா பங்குனியில்ருதுவேயானால் ஆயு
சுண்டுமக்களுண்டு அதிகமுண்டு, மருமமாயிருந்ததடாயிந்தநூ
ல்தான் மண்டலத்திலனைவோர்க்கும்வேணுமென்றே, சிறுமணூ
ர்முனுசாமியெழுதிவைத்தான் சித்திரம்போலெதிர்மொழியாய்
காணலாமே. (ருதுவாகும் வாரதின பலாபலன்.)

ஆமப்பாஞாயறென்றகிழமையானால்ஐயையோவியாதியினால்
மெலிந்துப்போவாள், ஆமப்பாதிங்களிலேருதுவேயானாலருந்
திபோலிருப்பாள்கற்புகாப்பாள், ஆமப்பாசெவ்வாயில்துக்கமு
ண்டு அதிகசுகங்கிடையாதுவிதவையாவாள், ஆமப்பாபுதன்கி
ழமைபிள்ளையுண்டுபொருளுமுண்டுபுத்தியுண்டுபுகழுண்டாமே

(ஞாயிற்றுக்கிழமையின் தோஷத்திற்கு பரிகாரம்) ஆதிவா
ரந்தன்னில் ஆனதோர்மாதுநல்லாள், வியாதியால்மெலிவாளென்
று விளம்பியதோஷத்திற், கோதுமையரிசியாலே குமரிக்குதிஷ்டி
வாங்கி, வீதியிலதிதிகட்கு விரைந்துநீதானஞ்செய்யே.

(செவ்வாதோஷத்திறகுபரிகாரம் வீடுபோல்பந்தலதுபோ
ட்டுமைந்தா வழியதற்கு யிரண்டுபுரம் அமைத்துநீதான, நாடி
யேபெண்ணைபொருவழியாய்சென்று நவமாகமுக்காடிட்டுடு
க்கச்சொல்லி, தேடியேஒருமூலைதீயைமாட்டி தேன்மொழியை
மறுவழியாய்வரவேசொல்லு, ஓடியேவந்தவுட னப்பியஸ்நா
னம் உடனுகசெய்துசில தானங்கேளே.

தானமதுசுமங்கலியை யழைத்துவந்து தக்கபடியப்பியங்கம்
செய்துவைக்க, வேணுமடா சிகப்புநிறசேலையொன்று வெத்தி
லையும்பாக்குமலர்மஞ்சள்குங்கம், ஆனமட்டும்சுயம்பாக மிதுக
ளெல்லாம் அறிவையற்கு தானமதுசெய்தாயானால், காணுமே
செவ்வாயின்கிழமைதோஷங் கண்காணாதோடுமடா திண்ணமே

வியாழமென்றகிழமையிலேருதுவேயானால் விளம்பினார் பா
க்யவதியென்றேசொல்லி, தாழ்விலாவெள்ளியென்ற கிழமையா
னால் தன்புருஷன்மனம்போல பணிகளசெய்வாள், பாழானச
னிக்கிழமைஆகாதையா படமுடியாதுன்பமடா தரித்ரியாவாள்
ஏழானவாரபலன் இதுவேயாச்சு இப்பலனை சொல்லுகிறோம்
ஏந்திக்கொள்ளே.

(சனிக்கிழமை தோஷத்திற்கு பரிகாரம்) பங்கமடா சனிக்கி
ழமை கொடியதோஷம் பரிகாரஞ்செய்யவென்றால் உளவுகே
ளு, வெங்கலமாமபாத்திரத்தில் எள்ளினெண்ணை வார்த்துநீப்
பெண்ணழகைப் பார்க்கச்சொல்லி, மங்காதபசும்பாலை கறந்து

வேறே மடக்கிலேவார்த்தந்தப் பெண்முன்காட்டி, எங்கொரு வர்க்கானாலும்தானஞ்செய்தால் ஏகுமடாசனிக்கிழமை தோஷந்தானே. (ருதுவாகுமிடத்தின் பலன்)

வீட்டுக்குவெளியில் விபசாரியாவாள் வனமென்றபூந்தோப்பில் சம்பதுண்டு வீட்டுக்குள்ளானால் ஒழுக்கமுண்டு விடுதியென்றபடுக்கையிலே சுகமடைவாள் கேட்டுக்கொள்பசுத்தொழுவந்தன்னிலானால் கெடுதியில்லை பதிவிரதை யாயிருப்பாள் காட்டுக்குள்நடக்கையிலே ருதுவானக்கால் நல்லதப்பா சுகமடைவாள் நம்புவாயே.

ஈம்படாநீர்க்கரையில் ருதுவேயானால் நல்லமழையுண்டதிக ஆயுசுண்டு, வம்படாபடுக்கையில்ருதுவானக்கால் வளர்த்தெடுத்ததந்தைதானிறந்துபோவான், கும்படாஸ்ரீகளுக்குநடுவேயானால் குற்றமில்லைதனசம்பத்தாயிருப்பாள், தெம்படாகொல்லையிலேருதுவானக்கால் திரவியத்தோடேயதிகபூமியுண்டாம்.

நிற்கையிலேருதுவானால் நன்னாய்வாழ்வாள் நிர்வாணமாயிருந்தால்கிலேசமப்பா, புசிக்கையிலேவெகுநன்மையென்னலாகும் பிறர்வீட்டிலனைவரும்விரோதியாவாள், மிக்கதொருகோயிலிடந்தனிலானால மேன்மையில்லையுபாயமதாய் வாழ்ந்திருப்பாள் தக்கதொரு கிராமத்தின் மத்திலானால் தடையன்றி விபசாரியாவாள்பாரே.

(ருதுவானயிடத்தைக்கொண்டு லக்கினந்தெரிந்துகொள்ளல்.)

குடியிருக்கும்வீட்டுக்குள் ருதுவேயானால்கூறடாமேஷலக்கினங்குறித்துக்கொள்ளு, இடமானபசுத்தொழுவந்தன்னிலானால் எழுதடாரிஷபலக்கினமென்றுநீதான், வடிவழகிநிர்வானமாயிருக்கும்போது வடிவுகண்டால் மிதுனலக்கினமென்றே சொல்லு, தடமென்றநீர்க்கரையில்ருதுவானக்கால் தடையன்றி கடகலக்கினமென்றுசொல்லே.

சொல்லப்பாவீட்டுக்குவெளியேயானால்சிங்கலக்கினமென்று சிறுய்ச்சொல்லு, சொல்லப்பாபூவனத்தின்தோப்பிலானால்சொருசானகன்னியென்ற லக்கினந்தானே, அல்லடாகிருமத்தின் மத்தியானால் வரையடாதுலாலக்கினமென்றுநீதான், வில்லடாசல்வீட்டில்ருதுவானக்கால் விருச்சிகலக்கினமென்றியம்பும்

தனவீட்டில்ருதுவானலென்றுசொன்னால் தனுசென்றலக்கினந்தான்தடையேதப்பா, பெண்ணவள்தான் கிணற்றருகேருதுவானக்கால் பேசடாமகரலக்கினமென்றுநீதான், வெண்ணவே ஆறுகுளங்கரையிலானால் எழுதடாலக்கினமதுகும்பமென்று, பண்ணுவதுஸ்தானம்நீராடும்போது பகரடாமீனலக்கினமே.

மேற்கூறிய 12 லக்கினங்களுக்கும் பலன்காண்க.

மேஷம்-தரித்திரம், ரிஷபம்-சொற்பபுத்திரர், மிதுனம்-பதிபட்சமுடையவள், கடகம்-வெகுபுத்திரர், சிங்கம்-புருஷனை நீங்கிடுவாள், கன்னி-பதிவிரதை, துலாம்-தனசம்பத்து, விருச்

சிகம்-விபசாரி, தனுசு-உத்தமம், மத்திபமானவள், மகரம்-மானமில்லாதவள், கும்பம்-திரவியமுண்டு, மீனம்-புத்திருண்டு.

(ருதுவாகும்போது யார்பாக்கிறார்களோ அத்தெரிசன பலன்)

தானே தான்கண்டாலுந் தக்கமப்பா தன்புருடன்கண்டாலுந் துக்கமாகுந், கேனகன்னிகாஸ்ரீகள்கண்டால் தெய்வபக்தியோடு புண்யவதியென்பார்கள், வீணைகைம்பெண்கள்கண்டாராகில் விதவையப்பாமங்கிலியமிழந்துபோவாள், வாணளண்ணையிட்டதலையர்கண்டால் வனிதையவள்தரித்திரமேயனுபவிப்பாள், வேசிகண்டால்போகபாக்கியமாயிருப்பாள் வியாதியஸ்தர்கண்டாக்கால்நோய்தானப்பா, தாசியொத்தவெள்ளாட்டிகண்டாளாகில் தரித்திரமேயனுபவிப்பாள்தரணிமீது, கூச்சமில்லாமங்கிலியஸ்திரீகள்கண்டால் குறவில்லைசுமங்கலியாய்வாழ்ந்திருப்பாள், நீச்சமதஸ்ரீபுருஷர்யார்கண்டாலும் நெறிதவறிஜாதிவிட்டுநீங்குவாளே.

(திதிபலன்) பிரதமை-பாவியாயிருப்பாள், துவிதியை-பாக்யவதி, திரிதிகை-குழந்தைகளைப்பெருவாள், சதுர்தி-பலபுருஷரை இச்சிப்பாள், சப்தமி-புத்திரபாக்கியம், அஷ்டமி-ராட்சசி, நவமி-கிலேசமாயிருப்பாள், தசமி-புத்ரபாக்யம், ஏகாதசி-சுபகரம், துவாதசி-பலரையுந்தூசிப்பாள், திரயோதசி-நல்லதேசசு, சதுர்த்தசி-பாவஞ்செய்பவள், பௌர்ணமி-அயல்வீடுதிரிவாள், அமாவாசை-தரித்திரவதியாயிருப்பாள்.

(நட்சத்திரபலன்-நொண்டிச்சிந்து) அசுவனிசுபகரமாம்-பரணி-ஆகாதுஅயல்வீடு வாழப்பொருக்காள், கிருத்திகைதரித்திரமாம-ரோகணி-கிளிபோலமதலைகள் மிகப்பெருவாள், மிருகசீரிடமானல்-மிக-சுசிகரமுடையவளாயிருப்பாள், திருவாதிரைதரித்திரமாம்-நல்லதிதி-யானபுனர்பூசம்பதிவிரதை, பூசம்பதிபட்சமுடையாள்-ஆயில்யம்-ஆகாதுமெத்தவும்கபடியடா மகம்புத்ரநாசமடைவாள-பூரமென்ற-நட்சத்திரமாகாது கெற்பநஷ்டமாம், உத்ரத்தில்தனதானயம்-அஸ்தமது-உரவுபந்துக்களைரட்சித்திடுவாள், சித்திரைக்குப்பதிவிரதை-அந்த-ரேவதிவெகுபுத்ரருண்டாயிருப்பாள், விசாகம்அழுக்குடையாள்-அனுஷம்-விட்டுப்பிரியாள்கொண்ட கணவனையே, கேட்டையில்ருதுவானல்-மெத்த-கெடுதியடாமுற்றுஞ்சிறையிருப்பாள், மூலம்புத்ரருண்டு-பூராடம்-முழுதும்விசனத்தால்மூழ்கியிருப்பாள், உத்ராடம்சம்பத்துடையாள்-திருவோணம்-ஒழியாதபாக்கியத்தால் வாழ்ந்திருப்பாள், அவிட்டம்பிள்ளையுண்டு-சதையம்-ஆயுசுபூர்ணமுடையவளாம், பூரட்டாதியிலே-ருதுவானல் - பிணியாளன்றனக்கேவாககுப்படுவாள், உத்ரட்டாதியென்ற-நட்சத்திரம்-உல்லாசயாகவே வாழ்ந்திருப்பாள், ரேவதிக்குசகலசுகம்-உள்ளளவும்-ரொம்பவும்பெருமையாய்வாழ்ந்திருப்பாள்.

(யோக பலன்) விஷகம்-விசனமுண்டாயிருப்பாள், பிரீதி-ச

ந்தோஷமுண்டாயிருப்பாள், ஆயுஷ்மான-தீர்க்காயுளுண்டாயி ருப்பாள், சௌபாக்கிய-சம்பத்துண்டாயிருப்பாள், சோபன-மங்களகரமாயிருப்பாள், அதிகண்டம்-பாவியாயிருப்பாள், சுப கர்ம-சுகமாயிருப்பாள், திரிதி-தைரியமாயிருப்பாள், சூலம்-துர்மரணமுண்டாயிருப்பாள், கண்டம்-பாவியாயிருப்பாள், விருத்தி-நன்மையுண்டாயிருப்பாள், துருவம்-பதிவிரதையாயிருப்பாள், வியாழு-விதவையாவாள், அரிஷணம்-யோகியாயிருப்பாள், வச்சிரம்-நல்லரூபவதியாயிருப்பாள், சித்தி-சகலசம்பத்துண்டாயிருப்பாள் விதிபதம் - கொடியவிசனமாயிருப்பாள் வரியாள்-தர்மசிந்தனையாயிருப்பாள், பரிகம் - உறவுக்குட்பகையாயிருப்பாள், சிவம்-நல்லவளாயிருப்பாள், சித்தம்-திரவியமுண்டாயிருப்பாள், சாத்தியம்-போகபாக்கியமாயிருப்பாள், சுபம்-சந்தோஷமுண்டாயிருப்பாள், சுப்பிரம்-வியாதியால்மரணமாவாள், வைதிருதி-உயிர்வதைசெய்வாள்.

(காரண பலபலன்) பவம்-சுகமுண்டாயிருப்பாள், பாலவம் சௌபாக்கியவதியாயிருப்பாள், கரசி-விதவையாவாள், வணிசை-கொள்ளகொடுக்கவல்லவள், சதுஷ்பாவம் - சந்தோஷமில்லாதவள், நாகவம்-நன்மையில்லாதவள், கிமஸ்துக்கினம்-தரித்திரமாயிருப்பாள். (ஏழாமிடப்பலன்)

சூரியன்-விதவையாவாள், சந்திரன்-குழந்தைகளை யிழப்பாள், செவ்வாய்-வேசையாவாள், புதன்-மலடியாவாள், குரு-பாக்கியமில்லாதவளாயிருப்பாள், சுக்கிரன்-வீடுவிட்டுப்போவாள், சனி-வியாதியாயிருப்பாள், ராகு-புத்திரனையிழப்பாள், கேது உரவுக்குபகையாயிருப்பாள். (நாழிகை பலாபலன்)

10-நாழிகையுள்ளாகில் உத்தமம் 20-நாழிகையுள்ளாகில்மத்திபம 30-நாழிகையுள்ளாகில் அதமம். (காலபலாபலன்)

பிராதக்காலமானால்-சுபம், முற்பகலானால் - தீர்த்தயாத்திரை, மத்யானமாகில்-புத்ரசம்பத்துண்டு, பிற்பகலானால்-சோரத்துவம், சாயங்காலமாகில்-வெகுபுத்ரருண்டு, அஸ்தமானமாகில் வேசையாவாள், முன்ராத்ரி-தீர்க்காயுளுண்டு, நடுராத்ரி-விதவையாவாள், பின்ராத்ரியாகில்-சுகமில்லாதவள், சந்திகளில்-பாக்கியமற்றவள்.

ஸ்தானக்குறிப்பு.-சாயங்காலமாகில், சூப்பனக்கிபோலிருப்பாள், அர்த்தராத்ரியாகில் இரண்டுஞ் சருங்கிப்போம்.

(ஜாம பலாபலன்)

1-வது ஜாமம் சுகமாயிருப்பாள்
2-வது ஜாமம் சுபகரமாயிருப்பாள்
3-வது ஜாமம் மங்கிலியமுண்டு
4-வது ஜாமம் பலரையும் வேண்டுவாள்

(ஜாமஸ்தனக் குறிப்பு)

1-வது ஜாமம் ஏந்துங்கொங்கையுண்டு

2-வது ஜாமம் குக்துகொங்கையுண்டு
3-வது ஜாமம் சாய்ந்தகொங்கையுண்டு
4-வது ஜாமம் சரிந்தகொங்கையுண்டு
(ருது ஸ்திரி வஸ்திரக்குறிப்பு)

நகைத்தால்-சிகப்பு பிடவை, கோபிபாகில்-வெள்ளைபிடவை நாணமாகில்-கருப்ப பிடவை. (ஷை விந்துவிட பலாபலன்)

வட்டமாகில்-பொருள்சேரும், சதுரமாகில்-சத்துருநாசம், பிறைபோலாகில்-ஆயுசுகுறையும், நீண்டிருந்தால்-மரணம், வண்டுபோலிருந்தால்-புத்திரருண்டு (தோஷ பலாபலன்)

1-வது நாழிகையில் புருஷனுக்காகாது
2-வது நாழிகையாகில் திரவியநாசம்
3-வது நாழிகையாகில் தரித்திரமாயிருப்பார்

(நட்சத்திர குணம்) அசுவனி-ரோகணி-மிருகசிரிடம்-பூசம் உத்திரம்-அஸ்தம்-சித்திரை-சுவாதி-விசாகம்-அனுஷம்-மூலம் திருவோணம்-அவிட்டம்-சதயம்-உத்திரட்டாதி-ரேவதி- இப் பதினாறு முக்தமம்.

மகம்-திருவாதிரை-கார்த்திகை-கேட்டை-புனர்பூசம் - இவ் வைந்தும் மத்திபம், மற்றவை அதமமென்பதாம்.

ருதுவானவள் கட்டியிருந்தசேலையைப்பார்த்து இன்னதிசையில் ஆணுனென்று தெரிந்துகொள்ளல்.

கிழக்கு—கிழிந்த பிடவையுடையவள்
தென்கிழக்கு—பச்சை பிடவையுடையவள்
தெற்கு—சிகப்புப் பிடவையுடையவள்
தென்மேற்கு—வெள்ளைப் பிடவையுடையவள்
மேற்கு—அழுக்குப் பிடவையுடையவள்
வடமேற்கு—கறுப்புப் பிடவையுடையவள்
வடக்கு—பஞ்சவர்னப் பிடவையுடையவள்

(ஷை பலாபலன்) கிழிந்தபடவையானால்-கலகம், பச்சைப் பிடவையானால்-தரித்திரம், சிகப்புப் பிடவையானால்-வியாதி, வெள்ளைப்பிடவையானால்-சந்தானம்-அழுக்குப் பிடவையானால் நன்மை, கருப்புபிடவையானால்-விபசாரம், பஞ்சவர்னபிடவை யானால்-தரித்திரம், சரிகை மஞ்சள்பிடவை சுகம்

(பிந்தாரூடம்)கிழக்கு 3-துளிகண்டிருக்கும் மேற்கு 4-துளி தென்கிழக்கு 6-துளி, வடமேற்கு 3-துளி, தெற்கு 1-துளி, வடக்கு 1-துளி, தென்மேற்கு 2-துளி, வடகிழக்கு 4-துளி.

(ஷை பலன்) ஒற்றையாகில் ஆண்குழந்தைகள், இரட்டை யாகில் பெண்குழந்தைகள். (புத்திராரூடம்)

கிழக்கு 2-புத்திரர், தென்கிழக்கு 1-புத்திரர், தெற்கு 8-புத் -ரர், தென்மேற்கு 4-புத்திரர், மேற்கு 6-புத்திரர், வடமேற்கு புத்திரர், வடக்கு-9-புத்திரர், வடகிழக்கு 10-புத்திரர்.

ஒற்றையாகில் சம்பத்துண்டு இரட்டையாகில் ரோகமுண்டு.

(ஸ்வேதமுகூர்த்தக்கால் அளவு) பரணியிலருதுவானால் 10 மாதமும் பூராடத்தில் ருதுவானால் 8-மாதமும் மகம் 12-மாதமும் திருவாதிரை-பூசம்-இரண்டிற்கும் 6-மாதமும் ஆயிலியம் கார்த்திகை-கேட்டை-இதுகளுக்கு 4-மாதமும உத்திரம் 5-மாதமும் அதற்குமேல் புருஷன் பார்த்தால் தோஷமில்லையென்பதாம் பதான பிரயத்தனஞ் செய்யலாம்.

ஒருபெண்கொள்ளவேணுமானால் சுபலட்சணங்கூறியது..

பெண்கொள்ளவேணுமென்றால் அப்பெண்ணுக்குரிய சுபலட்சணமும் அவலட்சணமுங்கூறுகிறதாம்.

அப்பெண்ணின் கூந்தலானது கோரைப்புல்லுபோல் நிகண்டிருந்தால் அதனால் குடிப்பழுது நேருமென்று கூறுகிறார்.

மேற்படி கூந்தல் பம்மையாயும் பரட்டையாகில் பழுதில்லை இது சுபலட்சணம்.

மேலும் சுருட்டைமயிராயிருக்குமாகில் குடும்பவிர்த்தியாகும் விபசார சந்தேகம்.

ஏறுநெற்றியும் மிரண்டபார்வையும் திரண்டநாசியும் வேப்பிலைபோல் வளைந்த புருவமும், பிடித்துளடங்கிய கழுத்தும் பொருந்தியல் பூரணவாழ்வுடையவளென்பது திண்ணம்.

அதிலும் மேற்படி நெற்றியில் பாவட்டினபக்கங்களில் முன் சுழியொன்றிருக்குமாகில மூத்தாருக்காகாதென்றும் பின்பக்கங் கழுத்துப்பிடரியில் பினசுழியிருக்குமாகில் அப்பெண் அமங்கலியாவாளென்னும் முன்னோர் கூறுகிறார்.

வயிறதில் தொப்புள் துடங்கி மார்புகுழிபரியந்தம் ரேகையிருக்குமாகில் வாழ்வுகுறையுமென்பது உண்மையாம்.

இடதுபக்கத்து யிடுப்புக்குமேற் சொல்லியபடி யிருக்குமாகில் அவள் யாதொரு குறைவில்லாமல் புத்திரபாக்கியமும் தனசம்பத்தும் தானியசம்பத்தும் தீர்க்காயுசுமாய் வாழ்வாளாம்.

தொடையிரண்டில் வலதுதொடையில் கத்தியாவது பாம்பின் படமாவது இருந்தால் அப்பெண்ணின் வாழ்வுதாழ்வாகும்.

மேற்படி தொடையில் மச்சங்களேதாவது உண்டாயிருக்குமாகில் தரித்திரவழியாயிருப்பாள். இடதுதொடையில் மேற்சொல்லிய கத்தியும் பாம்பின்படமிருப்பதன்றி மச்சமொன்றிருக்குமாகில் துன்பத்தைக் கொடுக்காது நன்மையே தருமென்பார்.

அப்பெண் கலையுதற நடப்பாளாகில் அவள் குடும்பம் நசித்துப்போமென்று சொல்வார். அவள் நடக்கும்போது கால்கட்டம் ஓடியுமானால் தரித்திரத்துக்கிடமாம்

அவள் நடக்கும்போது அமர்ந்தநடையும் குளிர்ந்தமொழியும் உடையவளாகில் அவள் குடும்பவிர்த்தியாய் நீடித்து வாழ்வாளென்று அறிவுள்ளோர் சொல்லுவார்.

பெண்கள் இலட்சணம் முற்றிற்று.